# கலைஞரும் நானும்

60



# “என்னம்மா பிரச்சினை? என்ன செய்யணும்?”

**“அரசியலில் பெண்களின் பங்கு அதிகரிக்க வேண்டும் என விரும்பியதுடன், அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டியவர் கலைஞர். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவரைப் பார்த்து வியந்து கற்றுக் கொண்டவை ஏராளம்” என நினைவுகளைப் பகிர்கிறார் முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி.**

பாலபாரதி, முன்னாள் எம்.எல்.ஏ.,

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசியல், கலைத்துறை எனப் பல வகைகளில் அறிந்திருந்தாலும், நேரடியான சந்திப்பும், அறிமுகமும் அமைந்தது 2006-ஆம் ஆண்டில்தான். திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக நின்றபோது, வேட்பாளர் அறிமுகம் செய்வதற்காக, கலைஞர் அவர்கள் வந்திருந்தார். பிரச்சார மேடையில் கலைஞர் அவர்களுடன் எங்கள் கட்சித் தலைவர்களும் இருந்தனர்.

திண்டுக்கல் வீட்டு வசதி வாரியத்தால் வீடு பெற்றவர்களுக்கு, நீண்ட காலமாக பட்டா தொடர்பான சிக்கல் நீடித்தது. அது தொடர்பான கோரிக்கை மனுவை, ‘திண்டுக்கல் தொகுதியின் கோரிக்கைகள்’ என எழுதி, கலைஞர் அவர்களிடம் அந்த மேடையிலேயே அளித்தேன்.

எப்படியும் அவர்தான் முதல்வர் ஆவார், அவர் கவனத்துக்குக் கொண்டு சென்றால் நிறைவேற்றித் தருவார் எனக் கொடுத்தேன். கலைஞர் சிரித்துக் கொண்டே “இன்னும் தேர்தல் முடியலையேம்மா, அப்புறம் கொடுத்துக்கலாமே” என அந்த மனுவைப் பெற்றார்.

மேடையில், அவர் பேசும்போது, “நிலமற்ற ஏழை மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்கிற வாக்குறுதியை கம்யூனிஸ்ட் கட்சிகளின் கோரிக்கைகளில் இருந்துதான் எடுத்துள்ளோம்” என அறிவித்தார். அவரை சந்தித்த முதல் நிகழ்வே ஏழை மக்களுக்கான பட்டா, நிலம் என்கிற நிகழ்வாக அமைந்தது.

## பூங்கா அரும்பும்

2006-11 காலகட்டத்தில் அவர் முதலமைச்சராக இருந்த அவையில், நான் உறுப்பினராக இருந்தேன். சட்டசபை நடைபெறும் நேரத்தில் அவர் இருந்தார் என்றால், சபையே கலகலப்பாக இருக்கும். காலை ஒன்பதரை மணிக்கு அலுவல் தொடங்குகிறது என்றால், பத்து நிமிடங்கள் முன்னதாகவே வந்து விடுவார். ஒரு நாளும் தாமதமாக வந்து பார்த்தது இல்லை.

ஒருமுறை, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தோழர் நன்மாறன் அவர்கள், ‘மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அறிவித்தீர்களே, அது எந்த நிலையில் உள்ளது?’ எனக் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த கலைஞர், சிரித்துக் கொண்டே ‘அரும்பும் நிலையில் உள்ளது’ என்றார். கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்ப, அந்த நேரத்தில் அவர் அளிக்கும் பதில் பொருள் நிறைந்ததாகவும், ரசிக்கும்படியும் இருக்கும்.

## இரண்டு கேள்விகள்

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் நீண்ட நாட்களுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன. எனது தொகுதிக்குட்பட்ட பகுதியான ரெட்டியார்சத்திரம் என்கிற ஊரில், போட்டியிட்ட எங்கள் கட்சியினரின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. அதிகாரிகள் கூறிய காரணங்களும் ஏற்புடையதாக இல்லை. இதையடுத்து கட்சியினருடன் சேர்ந்து திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டேன்.



**சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.**

எங்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றப்படும் நேரத்தில், ஒரு காவல் அதிகாரி ஓடி வந்து “சி.எம். உங்களிடம் பேசவேண்டுமாம் மேடம்” எனத் தொலைபேசியை அளித்தார். எதிர்முனையில் கலைஞர் இருந்தார். “என்னம்மா பிரச்சினை” எனக் கேட்டறிந்தவர், என்ன செய்யணும்மா? எனக் கேட்டார். “இப்போதைக்குத் தேர்தலை ரத்து செய்வதே சரியானது அய்யா” என்றேன். அன்றிரவே, தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை ரத்து செய்வதாக ஆணையிட்டார் கலைஞர்.

என்ன பிரச்சினை? என்ன செய்ய வேண்டும்? என இரண்டே கேள்விகள்தான். அதுவும், முதலமைச்சரே களத்தில் நிற்பவர்களிடம் கேட்பது எனில், சாதாரண விஷயமல்ல. கலைஞர் அந்த வகையில் அபூர்வமானவர். ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என நினைப்பதில் கலைஞருக்கு நிகர் யாருமில்லை.

## பெண்கள் நலனில்...

தமிழ்நாடு பெண்கள் ஆணையத்துக்கு, சட்ட அங்கீகாரம் வேண்டும் என நான் குரல் கொடுத்து வந்தேன். அதற்குத் தனி அதிகாரம், நிதி, சுயமாக இயங்கும் தன்மை ஆகியவை அளிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தார்.

முதியவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கைம்பெண்களுக்கான நிதி உதவித் திட்டத்தில், அவர்களுக்கு ஆண் வாரிசு இருக்கக்கூடாது என்கிற ஒரு விதி இருந்தது. அதை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தேன். வாரிசுகள் கவனிக்கவில்லை என்பதால்தான், அவர்கள் நிதி உதவி கேட்கின்றனர். அதேநேரத்தில், ‘ஆண் வாரிசுதான் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும், பெண் வாரிசு கவனிக்கத் தேவையில்லை’ என்கிற பாகுபாட்டினை ஏன் உருவாக்க வேண்டும்? அதனால் அந்த நிபந்தனையை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுப்பினேன். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கலைஞர், நிபந்தனையை நீக்கி ஆணையிட்டார்.

## ‘தீக்கதிர்’ வாசிப்பு

நான் சட்டமன்றத்தில் இருந்தபோது, கட்சியின் மூத்தத் தலைவர்கள் தோழர்கள் என்.வரதராஜன், நன்மாறன் ஆகியோர் கலைஞரை சந்திக்க ஒருமுறை வருகை தந்தனர். தலைவர்கள் வந்து சேரும் வரை கலைஞர் அவர்களுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தீண்டாமைச் சுவர் இடிக்கப்பட்ட நேரம், கம்யூனிஸ்ட் கட்சி இந்திய அளவில் அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிய நேரம் என்பதால், அதுபற்றிப் பேசினார். “என்னம்மா, தீண்டாமைச் சுவர்தான் இடிச்சாச்சில்ல, இன்னும் ‘தீக்கதிர்’ல எழுதிக்கிட்டிருக்கீங்க’ எனக் கேட்டார். “அய்யா பிரச்சினைகள், உங்க கவனத்துக்கு வரவேண்டும் என்பதால் எழுதி இருப்பாங்க” என்றேன். இந்திய அளவில் மதச்சார்பற்ற கூட்டணி குறித்தும், எங்கள் கட்சி எடுத்துள்ள நிலை குறித்தும் அப்போது பேசிக் கொண்டிருந்தார்.

அப்போதும் வீட்டுமனைப் பட்டா தொடர்பான கோரிக்கை மனு அளித்தேன். உடனே அருகில் இருந்த உதவியாளர் சண்முகநாதன் அவர்களைப் பார்த்து, “அவங்க வரும் நேரம் எல்லாம் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வர்றாங்க, எனக்கு அதுகுறித்த விவரங்களைத் தெளிவாகக் கொடுங்க” எனக் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர், அந்தப் பிரச்சினைகளை 2008-ஆம் ஆண்டுத் தீர்த்தும் வைத்தார். 25 ஆண்டுகளாக நீடித்து வந்த பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

## சிறுபான்மை மாணவிகளுக்கு விடுதி

சிறுபான்மைச் சமூக மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்கு வசதியாகத் தனி உறைவிட விடுதி வேண்டும் எனக் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக் கொண்டு, ஐந்து மாவட்டங்களில் தொடங்குவதற்கு ஆணையிட்டார். அதில், திண்டுக்கல் மாவட்டமும் ஒன்று. இப்படித் தொடர்ச்சியாக மக்களின் தேவைகள் குறித்து கலைஞரிடம் கோரிக்கை வைத்துக் கொண்டே இருப்பதும், அவற்றை நிறைவேற்ற ஆவன செய்ததும், எப்போதும் கலைஞரை நினைத்துப் பார்க்க வைக்கும் நிகழ்வுகள். மக்களின் தேவைகளை அறிந்தவர் என்பதால், அவையெல்லாம் நடந்தன.

அந்த ஆட்சிக்காலத்தின் இறுதியில் அரசியல் ரீதியாக எதிர்நிலை எடுத்தோம். சட்டமன்றத்தில் அரசு மீது கடும் விமர்சனங்களை வைப்போம். குற்றம் சாட்டி இருக்கிறோம். ஆனால், அவர் கோபப்பட்டு பதிலளித்ததே இல்லை. அந்த நிதானம் வேறு யாருக்கும் வராது.

கலைஞர் அவர்களின் அரசியல் பக்குவம், மாற்றுக் கட்சியினரை அவர் அணுகும் விதம் ஆகியவற்றில் ஒரு சதவிகிதம் கற்றுக்கொண்டாலே போதும், நாம் அரசியலில் இயங்குவதற்கான தகுதியைப் பெற்று விடுவோம்.

**....பகிர்வார்கள்**

## ‘அவுட்லுக்’ காட்டும் திராவிட மாடல்!




கழக அரசு படைத்து வரும் சாதனைகளை ‘Dravidian Model: Leading By Example’ என்கிற தலைப்பில், பல்வேறு துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளோடு வெளிக் கொணர்ந்துள்ளது ஆங்கிலத்தில் வரும் ‘அவுட்லுக்’ இதழ். மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் சிறப்பாசிரியராக இந்த இதழை, மிக நேர்த்தியாக தயாரித்து இருக்கிறார். கல்வி, மருத்துவம், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், மொழியியல், நூலகத்துறை, பாலின சமத்துவம் என பல்வேறு தலைப்புகளில் பல தரப்பு நிபுணர்கள் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். தமிழ்நாட்டிடமிருந்து இந்திய ஒன்றியத்தின் பிற மாநிலங்கள் தெரிந்துக் கொள்ளவேண்டிய ‘திராவிட மாடல்’ திட்டங்களின் பயன்களை இவ்விதழ் மூலம் அறிந்துகொள்ளலாம். இணையத்தில் கட்டணமின்றி படிக்கக் கிடைக்கிறது. இணைப்பு :

https://www.outlookindia.com/magazine/05-march-2024

## :ப்ளாஷ்பேக்



பொன்.அண்ணாவி



### பிறந்த நாள் வாய்ப்பு!

அண்ணன் நன்னியூர் ராஜேந்திரன் அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்த போது, என்னை தலைமைக் கழகப் பேச்சாளராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கினார். கழகத்தில் சேர்ந்த நாள் முதலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்க வேண்டும் என்பது என் நெடுநாள் கனவாக இருந்தது. 2012 மார்ச் 1-ஆம் நாளன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களையும் தளபதி அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை தலைமைக் கழகப் பேச்சாளர் என்று அறிமுகம் செய்து கொண்டேன். “வாழ்த்துகள்ய்யா” என்றார்.

**–கவிஞர் பொன்.அண்ணாவி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், கரூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### போராட்ட அணிகள்!

1963-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு கொண்டு வந்த ஆட்சி மொழிகள் சட்டத்துக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தது கழகம். நெடிய போராட்டத்துக்குத் தயாராக வேண்டும் என அழைப்பு விடுத்தார் பேரறிஞர் அண்ணா. ஜூன் மாதத்தில் சென்னையில் கூடிய கழகத்தின் செயற்குழுவிலும், பொதுக்குழுவிலும் நீண்ட போராட்டத்துக்கு முடிவு செய்யப்பட்டன. கலைஞர் தலைமையில் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. நீண்ட கால சிறைக்குத் தயாராக இருப்பவர்கள், குறுகிய கால சிறைவாசத்துக்குத் தயாராக இருப்பவர்கள் என பட்டியல் தயாரிக்கப்பட்டு, போராட்ட அணிகள் பிரிக்கப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

413

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131